கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.334/2020 வா.சா.1தங்கராஜ்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 01.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடந்த 2014-ல் கட்டிய எனது வீட்டின் வடபுற சுவரை பூச்சு செய்யவிடாமல் பிரதிவாதி தடுப்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2) கிழமேல் சாலைக்கு வடபுறமாக எனக்கு சொந்தமான வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு வடபுறம் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீடு கட்டும்வரை என் வீடு உள்ள இடம் காலியாக இருந்தது என்றால் சரியல்ல. அங்கு சாளை அமைத்து வசித்து வந்தேன். அது கூரை சாளையா என்றால் ஆமாம். அதற்கு வரிவிதிப்பு இல்லை என்றால் சரிதான்.

3) பிரதிவாதி வீடு 80 ஆண்டுகாலமாக அங்கு உள்ளது என்றால் சரிதான். வீடு கட்டும்முன் நான் என் நிலத்தை நில அளவையர் மூலம் அளந்தேனா என்றால் அளக்க நடவடிக்கை எடுத்தும், நில அளவையர் வந்தும் பிரதிவாதி அளக்கவிடவில்லை. நில அளவையர் இரசீதோ, அறிவிப்போ இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

4) பிரதிவாதி தனது வீட்டின் தென்புற எல்லையில் சிமெண்ட் சீட் வைத்து அடைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த சிமெண்ட் சீட்டை அகற்ற வேண்டும் என்றுதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதற்காகவும் தாக்கல் செய்துள்ளேன். நான் வீடுகட்டும்போது என் வீட்டின் வடபுற எல்லையை ஒட்டியே சுவர்

எழுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு செய்திருந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகவும், நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** நீதிமன்ற ஆணையர் நியமனத்தின்போது நில அளவையர் உடன் அளக்குமாறு கோரவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமன மனுவில் வழக்கு சொத்துக்களை அளக்ககோரி நான் பரிகாரம் முன்வைக்கவில்லை என்றால் சரியல்ல. என் நிலத்தின் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால்தான் நான் இவ்வழக்கில் அளவையர் அளவை கோரவில்லை என்றால் சரியல்ல.

5) பிரதிவாதி தன் வீட்டு தென்புறத்தில் வைத்திருந்த சிமெண்ட் சீட்டுக்கும், என் வீட்டின் வடபுற சுவருக்கும் எவ்வளவு இடைவெளி உள்ளது என்றால் 4 1/2 அடி உள்ளது. அவ்வாறு 4 1/2 அடி இடைவெளி உள்ளபோது ஏன் பூச்சுவேலை செய்யவில்லை என்றால் பிரதிவாதி விடவில்லை.

6) நான் வழக்கை தாக்கல் செய்தபோது எதிர்வரில்லா இடைக்கால தடையாணை பெற்றிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி இடைக்கால தடையாணை மனுவானது விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தெரியவில்லை. மேற்படி இடைக்கால தடையாணை இறுதி உத்தரவில் பிரதிவாதியின் சிமெண்ட் சீட்டுக்கும், எனது சுவருக்கும் போதிய இடைவெளி இருப்பதாகவும் நான் தவறான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளதாகவும் கண்டே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் பிரதிவாதியின் சிமெண்ட் சீட்க்கும், எனது சுவருக்கும் போதிய இடைவெளி இருப்பதாகவே குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. என் சுவரை பூச்சுவேலை செய்யவிடாமல் பிரதிவாதி தடுப்பதாக நான் தவறாக வழக்கு தொடுத்துள்ளேன்

என்றால் சரியல்ல.  நான் என் வீடு கட்டும்போது எனது இடத்தின் முழுமைக்கும் கட்டிவிட்டு தற்போது பிரதிவாதியின் இடத்தின் தென்புற பகுதியை ஆக்கிரமிக்க பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறான சங்கதியை கண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வீடு கட்டியபிறகு சுண்ணாம்பு பூச்சுவேலை செய்தேனா என்றால் வழக்கு சுவரை தவிர்த்து மற்ற இடங்களில் சுண்ணாம்பு பூச்சு செய்தேன்.  வழக்கு சுவர் நாளது தேதிவரை பூசப்படாமல் உள்ள நிலையில் எப்போதும்போல் சுண்ணாம்பு பூச வேண்டும் என உரிமைகோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அதனால் இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.